Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY APRIL 27, 2023

வியாழக்கிழமை ஏப்ரல் 27, 2023 | ஒளி: 08 கதிர்: 258 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## கொரோனா அதிகரிப்பு

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை இலங்கையில் அதிகரித்துள்ளது. செவ்வாய்க்கிழமை (25) மட்டும் புதிய தொற்றாளர்கள் நால்வர் இனங்காணப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் சேர்த்து இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 672,139 ஆக அதிகரித்துள்ளது



என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடன் குண்டு '26' இல் வெடிக்கும்



சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையை தாம் ஆதரிக்கப்போவதில்லை எனத் தெரிவித்துள்ள உதய கம்மன்பில எம்.பி., 2022 ஆம் ஆண்டை விடவும் 2026 இல் பாரிய நெருக்கடி ஏற்படும் என்று எச்சரிக்கை விடுத்தார். தொடர்ச்சி P2

## கனவு காணலாம் யதார்த்தமே வெல்லும்



கற்பனை உலகத்துக்கும் மக்கள் முகம்கொடுக்கும் நிஜ வாழ்க்கை யதார்த்த உலகத்துக்கும் இடையே வித்தியாசங்கள் உள்ளன எனத் தெரிவித்த அநுரகுமார எம். பி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கற்பனை உலகத்தில் இருந்து கருத்துகளை வெளியிடுகின்றார் என்றார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (26) விசேட கூற்றை முன்வைத்த போதே அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணைக்கு புறம்பாக ரணில் கருத்து தெரிவிக்கும் போது தினேஸ் குணவர்தனவின் பக்கத்தில் இருப்பவர்கள், தொடர்ச்சி P2

## பகலுணவு நிறுத்தப்படும் அபாயம்

உணவு விநியோகஸ்தர்களுக்காக கொடுப்பனவுகளை முறையாக வழங்காமையால் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படும் பகல் உணவு வேலைத்திட்டம் நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (26) கல்வி அமைச்சரிடம் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டில் தற்போது



பாடசாலைகளுக்காக பகல் உணவு விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. உணவு விநியோகஸ்தர்களுக்கு தேவையான நிதி வழங்காமையே இதற்கு காரணமாக அமைந்துள்ளது. தொடர்ச்சி P2

## வவுனிக்குளத்தில் மூழ்கி சகோதரர்கள் இருவர் உயிரிழப்பு

சண்முகம் தவசீலன்



மரணவீட்டில் கலந்துகொள்ள வந்த சகோதரர்கள் இருவர் முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் குளத்தில் நீராட சென்றிருந்த நிலையில், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

மல்லாவி பகுதியில் புதன்கிழமை (26) இடம்பெற்ற மரணவீட்டில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் இருந்து கலந்து கொண்ட சகோதரர்கள் வவுனிக்குளம் குளத்தில் நீராட சென்றிருந்தனர்.

அவர்களில், ரவிச்சந்திரன் சுரேஸ் என்ற 16 வயது சிறுவன் துரிசு பகுதியில் நீரில் மூழ்கியுள்ளார். மூழ்கிய தம்பியை காப்பாற்ற சென்ற ரவிச்சந்திரன் சுமன் ( வயது 27) என்ற சகோதரனும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். தொடர்ச்சி P2

## தமிழர்களின் காணிகளை சீனாவுக்கு வழங்க முயற்சி

### ஸ்ரீதரன் குற்றச்சாட்டு; பகிரங்கப்படுத்துவேன் என்கிறார்

தமிழர்களின் காணிகளை சீனாவுக்கு வழங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை எதிர்வரும் நாள்களில் பகிரங்கப்படுத்துவேன் என்று கூட்டமைப்பின் எம்.பியான எஸ். ஸ்ரீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (26) இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்) உடன்படிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்களின் பிரதேசங்களை சீனாவுக்கு வழங்க அரசு தீவிர கவனம் செலு த்துகிறது.



அரசின் இந்தத் தமிழர் விரோத நடவடிக்கைக்கு சர்வதேச நாணய நிதியம் ஒத்துழைப்பு வழங்குகிறதா என்று நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையிடம் கேள்வியெழுப்பினார். தொடர்ச்சி P2

## மே இறுதிக்குள் பாடப்புத்தகங்கள்

இதுவரை அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்கள் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள கல்வி வெளியீட்டு திணைக்களம், மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களை அடுத்த மாத இறுதிக்குள் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை



எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு கல்வி வெளியீட்டு திணைக்களத்திலிருந்தே பாடப்புத்தகங்கள் நேரடியாக விநியோகிக்கப்படுகின்றன.

பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப் புத்தகங்களும் இவ்வாறு விநியோகிக்கப்படுவதாக கல்வி வெளியீட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது. தொடர்ச்சி P2

## ஒருவரின் இறுதிக்கிரியை கிளிநொச்சியில் நடைபெற்றது

சுப்பிரமணியம் பாஸ்கரன்

யாழ். நெடுந்தீவில் இறங்குதுறைக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்ட ஐவரில் ஒருவரான சுப்பிரமணியம் (வயது 75) மகாதேவாவின் இறுதிக்கிரியை புதன்கிழமை (26) நடைபெற்றது. இவர், ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார்.

கிளிநொச்சி - கணேசபுரத்திலுள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் பூதவுடல் வைக்கப்பட்டு, திருநகர் பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்தக் கொலைகள் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் மே மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேகநபரை அடையாள அணிவகுப்பிற்கு எதிர்வரும் 09 ஆம் திகதி உட்படுத்தவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். தொடர்ச்சி P2

## இந்திய நாணயம் இங்கும் புழங்கும்



இலங்கைக்கு வருகை தரும் இந்திய சுற்றுலாப் பயணிகளால் இந்திய ரூபாயை பயன்படுத்த முடியும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய வணிக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செயலமர்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மத்திய வங்கியின் ஆளுநர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

'இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் எதிர்காலப் பயணம்' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்தச் செயலமர்வு மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தலைமையில் நடைபெற்றது. தொடர்ச்சி P2

## நிபந்தனைகளை நிறைவேற்ற சட்டங்கள் இயற்றப்படும்

சர்வதேச நாணய நிதியத்துடன் (ஐ.எம்.எப்) செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்ற ஒரு



சில சட்டங்கள் இயற்றப்படும் எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை திறைசேரி மேற்கொண்டுள்ளது என்றார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (26) சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையாற்றினார். தொடர்ச்சி P2

## புதுப்பொலிவு பெற்றுள்ள தென்றல்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தற்சமயம் புதுப்பொலிவுடன் நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றது.


கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் தலைமையில், கூட்டுத்தபானத்தின் ஆலோசகர் விஷாரத, கலாபூஷனம் ஏ.மகேந்திரனின் ஆலோசனையில் நிகழ்ச்சிகள் புதுப்பொலிவு பெற்றுள்ளன.



அதற்கமைய, மதுர கீதங்கள் நிகழ்ச்சியும் ஜனரஞ்சகமான நிகழ்ச்சியாக மாறியுள்ளது. தொடர்ச்சி P2

## ஜப்பானிய அரசாங்கத்திடமிருந்து 503 மில். ஜப்பானிய யென்கள் உதவி

கொவிட்-19 தொற்றுப் பரவலுடன் அதிகரித்துக் காணப்படும், தொற்றுகளைக் கொண்ட கழிவு முகாமைத்துவ வசதிகளை மேம்படுத்துவதற்காக 503 மில்லியன் ஜப்பானிய யென்களை (3.7 மில்லியன் அமெரிக்க டொலர்) வழங்குவதற்கான பரிமாற்ற உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி




கைச்சாத்திட்டிருந்தார். இந்நிகழ்வு ஏப்ரல் 26 ஆம் திகதி இடம்பெற்றது.


## வலம்புரி சங்குடன் ஒருவர் கைது

ராமு தனராஜா, பாலித ஆரியவங்ச

கெப்பட்டிபொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொறக்காப்பத்தன பகுதியில் வைத்து புதன்கிழமை (26) முற்பகல் 11.30 மணியளவில் வலம்புரி சங்குடன் ஒருவர் நுவரெலியா விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சில்மியாபுர பகுதியை சேர்ந்த 45 வயதான ஒருவரே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். தொடர்ச்சி P2

## 9 நில அதிர்வுகள் பதிவாகியுள்ளன



2023 இல் 04 மாதங்களுக்குள் 09 நில அதிர்வுகள் நாட்டில் பதிவாகியுள்ளன என புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

அவற்றில் பெரும்பாலான நில அதிர்வுகள் நாட்டின் உட்பகுதியில் பதிவாகியுள்ளதுடன், சில நில அதிர்வுகள் நாட்டை அண்மித்த கடற்பிராந்தியத்தில் பதிவாகியுள்ளன.

நாட்டில் பதிவாகிய நில அதிர்வுகள் தொடர்பான தரவுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு உள்ளதாக குறிப்பிட்டுள்ள பணியகம், அதிகூடிய மெக்னிடியூட் அளவான நில அதிர்வு புத்தல - சூரியவெவ பகுதியில் பதிவாகியிருந்தது.

குறித்த தரவுகளை சர்வதேச தரவுகளுடன் ஒப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## "வாருங்கள் பயணிப்போம்" – ரணில்; "ஒருபோதும் நினைக்காதீர்கள்" – சஜித்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேரடியாக அழைத்தபோது, "நீங்கள் ஒருபோதும் நினைக்க வேண்டாம்" என சஜித் பிரேமதாஸ பதிலளித்தார். இருவருக்கும் இடையில் சம்பாஷனை மிகவும் சுவாரஸ்யமாக இருந்தையை பாராளுமன்றத்தில் புதன்கிழமை (26) அவதானிக்க முடிந்தது.

முன்னதாக தனதுரையை தொடர்ந்த ஜனாதிபதி, "நான் சொன்னதை செய்வேன்". அதனால்



நீங்களும் எங்களுடன் சேர்ந்து பயணிக்க முன்வரவேண்டும்"

என ஜனாதிபதி நேரில் அழைப்புவிடுத்தார். அதற்கு பதிலளித்த சஜித், "அப்படி ஒன்று நடக்கும் என நீங்கள் ஒருபோதும் நினைக்க வேண்டாம்" என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சில கேள்விகளை கேட்பதற்கு முற்பட்டபோது சபையில் இருந்து வெளியேறிச் செல்ல ஜனாதிபதி முற்பட்டார். எனினும், "நான் கேட்கும் கேள்விகளையும் கேட்டுவிட்டு செல்லுங்கள்" என ஜனாதிபதியை சஜித் கேட்டுக்கொண்டார்.

"எனது இராஜாங்க அமைச்சர்கள் இருவரும் சபையில் இருக்கின்றனர். உங்கள் கேள்விகளுக்கு அவர்கள் பதில் வழங்குவார்கள். அத்துடன் நான் சொல்வதை செய்வேன். அதனால் நீங்களும் எங்களுடன் சேர்ந்து பயணிக்க முன்வாருங்கள்" என ரணில் அழைப்பு விடுத்தார்.

இந்த அழைப்புக்கு சஜித் பதிலளிக்கையில், "தயவுசெய்து அந்த ஊகங்களை நீங்கள் மேற்கொள்ள வேண்டாம். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கடன் குண்டு '26' இல் வெடிக்கும்



தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் ஒருதுளியேனும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகையால், 2026 இல் கடன் குண்டு வெடிக்கும் என்றார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (26) இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை மீதான முதல்நாள் விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்த விவாதம் முழுமையானது அல்ல; விவாதத்துக்கு தேவையான முழுமையான ஆவணம் சபையில் ஆற்றுப்படுத்தாது விவாதம் நடக்கிறது. ரூபாய் இல்லாமல் அல்ல, டொலர் இல்லாத காரணத்தால்தான் ஐ.எம்.எப் வேலைத்திட்டத்துக்கு சென்றுள்ளீர்கள். எனினும், இந்த உடன்படிக்கை முழுவதிலும் ரூபாய் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. டொலர் பிரச்சினைக்கு தீர்வு இல்லை.

ஒரு வருடத்துக்கு இறக்குமதி செலவுக்காக மட்டும் 22 பில்லியன் டொலர் செலவாகிறது. கடன் செலுத்துவதற்காக 7 பில்லியன் டொலர் தேவைக்கப்படுகின்றது. ஆகையால், மேலும் கடனாளியாவதை தவிர, டொலர் பிரச்சினைக்கு இதில் தீர்வு இல்லை என்றார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடிக்கு தீர்வுகள் எதுவும் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் இல்லை. இதனால் அந்த உடன்படிக்கையை தாம் ஆதரிக்கப் போவதில்லை என்றார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தொடர்பில் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2022 செப்டெம்பர் மாதத்தில் அதிகாரிகள் மட்டத்தில் உடன்படிக்கை செய்யப்பட்ட போது அதனை முன்வைக்குமாறு கோரினோம். ஆனால் முழுமையான உடன்படிக்கை இறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அதனை சமர்ப்பிப்பதாக கூறினாலும் இன்னும் அதனை முன்வைக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வது தொடர்பில் 2021 செப்டெம்பரில் முதலில் நானே அமைச்சரவையில் கருத்துகளை முன்வைத்தேன். அப்போது வாசுதேவ நாணயக்கார மட்டுமே அதனை எதிர்த்தார். ஆனால் இன்று நாங்கள் இந்த யோசனையை எதிர்க்கின்றோம். இதற்கு காரணங்கள் உள்ளன என்றார்.

இப்போதைய நிலைமையில் இன்னும் கடன் பெற்றுக்கொண்டு கடன்காரனாக மாறுவதே நடக்கும். இதன்மூலம் நெருக்கடிகளுக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை. இதனால் நாட்டை மேலும் மேலும் கடன் சுமைக்குள் தள்ளும் வகையிலான இந்த உடன்படிக்கையை நாங்கள் எதிர்க்கின்றோம் என்றார்.

## கனவு காணலாம்...

அவருக்கு ஆதரவாக அந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் கைதட்டுகின்றனர். அவருக்கு கற்பனை உலகில் இருந்து கொண்டு கனவுகளை காண முடியும். ஆனால் யதார்த்த உலகமே வெற்றியடையும் என்றார்

## பகலுணவு நிறுத்தப்படும் அபாயம்

இதனால் பாடசாலைகளுக்கான உணவு விநியோகம் நிறுத்தப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர். உணவு வழங்கப்படாது என்று அரசாங்கம் தீர்மானிக்காவிட்டாலும் தானகவே அது நிறுத்தப்படும் அபாயம் நிலவுகின்றது என்றார்.

பாடசாலைகளுக்காக உணவு விநியோகத்தை முறையாக முன்னெடுக்க அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கை என்ன? அதிபர் வெற்றிடம் நிலவும் பாடசாலைகளில், அதிபர் நியமனங்களை எப்போது செய்யப் போகின்றீர்கள் என்று கேட்கின்றோம் என்றார்.

## மே இறுதிக்குள் பாடப்புத்தகங்கள்

இம்முறை 33 மில்லியன் பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளதுடன் அதற்காக 16,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நிபந்தனைகளை...

ஜனாதிபதியின் உரை நிறைவுற்றதும் எழுந்த எதிரணியின் சுயாதீன எம்.பியான பாட்டலி சம்பிக்க ரணவக்க, இராஜி யங்களுக்கு இடையில் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்களை சட்டமாக்குவது தொடர்பில் சர்வதேச ஒப்பந்தங்கள் தொடர்பான அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை சட்டமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நிபந்தனைகளை சட்டமாக்காமல் வழமை போல் ஒரு ஒப்பந்தமாக செயற்படுத்த முடியும்.

எனவே நிபந்தனை செயற்படுத்தல் முறை தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என்றார். இக்கேள்விக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதிலளிக்கையில், நாடுகளுக்கு இடையில் ஒப்பந்தம் ஏதும் செய்யப்படவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளோம். அரச நிதி சட்டம் மற்றும் வருமான சட்டம் ஆகிய பிரதான இரு சட்டங்களை அடிப்படையாக கொண்டு நிபந்தனைகளை செயற்படுத்த அவதானம் செலுத்தப்ப ட்டுள்ளது என்றார்.

நிபந்தனைகளை செயற்படுத்த ஒரு சில சட்டங்களை இயற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான சட்டமூலத்தை தயாரிக்கும் பணிகளை திறைசேரி மேற்கொண்டுள்ளது என்றார்.

## "வாருங்கள் பயணிப்போம்"...

ஐக்கிய மக்கள் சக்தி உங்களுடன் சேர்ந்து நடக்கும் என ஒருபோதும் எண்ண வேண்டாம். நாங்கள் விவாதிப்போம்; கலந்துரையாடுவோம். ஆனால் உங்களுடன் சேர்ந்து பயணிப்போம் என நினைக்க வேண்டாம்" என்றார்.

## ஒருவரின் இறுதி கிரியை...

கொலைகள் இடம்பெற்ற வீட்டிற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. நெடுந்தீவிலுள்ள வீடொன்றில் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு ஐந்து முதியவர்கள் கடந்த 22 ஆம் திகதி கொலை செய்யப்பட்டனர்.

இந்தக் கொலைகள் தொடர்பில் 51 வயதான சந்தேகநபர் மறுநாள் 23 ஆம் திகதி புங்குடுதீவில் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரின் வாக்குமூலத்தின் பிரகாரம், கொலை செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட கத்தியும், கொலை செய்யும்போது சந்தேகநபர் அணிந்திருந்ததாகக் கூறப்படும் சாரமும் கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டிருந்தன.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 51 வயதான சந்தேகநபர், கடந்த 25 வருடங்களாக ஜெர்மனியில் வசித்து வந்த நிலையில் , கடந்த 2019 ஆம் ஆண்டு நாடு திரும்பியமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## வவுனிக்குளத்தில் மூழ்கி சகோதரர்கள் இருவர் உயிரிழப்பு



உயிரிழந்த இருவரது உடலங்களும் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த இருவரது உடலங்களையும் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் வருகைதந்து பார்வையிட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவுகளிடம் ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்திய நாணயம் இங்கும் புழங்கும்



இதன்போது உரையாற்றிய இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பில் விளக்கமளித்தார்.

தகவல் தொழில்நுட்பம், மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பில் இதன்போது அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியால் இந்திய ரூபாய் பெயரிடப்பட்ட நாணய அலகாக மாற்றப்படுவதால் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக கொடுக்கல், வாங்கல்கள் மாத்திரமன்றி இலங்கைக்கு வருகை தரும் இந்திய சுற்றுலா பயணிகளுக்கும் இந்திய ரூபாயை பயன்படுத்த முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர், கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

## தமிழர்களின் காணிகளை சீனாவுக்கு வழங்க முயற்சி



நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினை, அரசியலமைப்பு பிரச்சினைக்கு தீர்வு காண சர்வதேச நாணய நிதியம் எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. தமிழர்களுக்கு எதிராக மீண்டும் அழிப்பை தொடர்வதற்காகவா நாணய நிதியம் நிதி வழங்குகியுள்ளது எனக்கேட்டார்.

நாட்டில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மீதான செயற்பாடுகள் நாளாந்தம் தீவிரமடைந்து வரும் நிலையில் சர்வதேச நிதி நிறுவனங்கள் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன.

இனவாதம் நாட்டின் பிரதான கருபொருளாக உள்ளது. இனவாத சிந்தனை ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் உள்ளங்களில் ஊறிப்போயுள்ளன. இவ்வாறான நிலையில் தமிழர்களின் பிரதேசங்களை சீனாவுக்கு வழங்க அரசாங்கம் அவதானம் செலுத்துகிறது. இதற்கு சர்வதேச நாணய நிதியம் ஒத்துழைப்பு வழங்குகிறதா என்று நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையிடம் கேட்கிறேன்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் தொடர்பில் சபைக்கு இரண்டு பிரதிகள் சமர்ப்பி க்கப்பட்டுள்ளன. ஒப்பந்தம் கைச்சாத்தி டப்படுவதற்கு முன்னர் சாதக, பாதக விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் இடம்பெற்றிருந்தால் முரண்பாடற்ற ஒருமித்த தீர்மானத்தை எடுத்திருக்க முடியும். ஆனால் விவாதத்தின் போதுதான் நாணய நிதியத்துடனான நிபந்தனைகள் விடயங்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனவே இது ஒரு ஏமாற்று வேலை என்றார்.

## வலம்புரி சங்குடன் ஒருவர் கைது

அந்த நபரிடமிருந்து 11.6 அங்குல நீளமும் 14 அங்குல சுற்றளவும் 500 கிராம் எடையும் கொண்ட வெள்ளை, மஞ்சள் மற்றும் பழுப்பு நிறத்தில் டைட்டானியம் வகையைச் சேர்ந்த வலம்புரி சங்கு கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக கெப்பட்டிபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 6 முஸ்லிம் அமைப்புகளின் தடையை நீக்கி அறிவித்தல் விடுக்க ஜனாதிபதி தயார்

பாதுகாப்பு அமைச்சின் தடைப் பட்டியலில் உள்ள 11 முஸ்லிம் அமைப்புகளில் 6 அமைப்புகள் மீதான தடையை நீக்குவதற்கு தேவையான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவது தொடர்பில் ஜனாதிபதி சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றுள்ளதாகவும் தம்மிடம் தெரிவித்ததாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தானும், அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இசாக் ரஹ்மானும் சந்தித்து குறித்த 6 அமைப்புகளின் தடைநீக்கம் குறித்து கலந்துரையாடிய போதே ஜனாதிபதி இவ்வாறு உறுதியளித்ததாக அவர் மேலும் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அவ்வமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகளுடன் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகள் அண்மையில் கலந்துரையாடியுள்ள விடயங்களை பற்றி விளக்கி இது தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து எடுத்துரைத்த நாங்கள் இவ்விடயத்தின் அவசியம் குறித்தும் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்தோம்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நாங்கள் முன்வைத்த வேண்டுகோளின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பில் இதற்கான நடவடிக்கைகள் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டதுடன்

> **"தடை செய்யப்பட்ட குறித்த 6 அமைப்புகளின் முக்கியஸ்தர்களுடன் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் தனித்தனியே கலந்துரையாடியுள்ளனர். குறித்த 6 அமைப்புகளிடமிருந்தும் பாதுகாப்பு அமைச்சினால் சில ஆவணங்கள் கோரப்பட்டு அந்த ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு 6 அமைப்புகள் மீதான தடையை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது**

தடை செய்யப்பட்டவற்றில் 6 அமைப்புகள் எவ்வித பயங்கரவாத சம்பவங்களுடனோ பயங்கரவாத அமைப்புகளுடனோ தொடர்பைக் கொண்டிருக்கவில்லை. எனவே, இவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டுமென நானும் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இஷாக் ரஹ்மானும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

எமது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார். இதனடிப்படையில் தடை செய்யப்பட்ட குறித்த 6 அமைப்புகளின் முக்கியஸ்தர்களுடன் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் தனித்தனியே கலந்துரையாடியுள்ளனர். மேலும், குறித்த 6 முஸ்லிம் அமைப்புகளிடமிருந்தும் பாதுகாப்பு அமைச்சினால் சில ஆவணங்கள் கோரப்பட்டு அந்த ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு 6 அமைப்புகள் மீதான தடையை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மேலும் அவர் தெரிவித்தார்.

## புதுப்பொலிவு பெற்றுள்ள தென்றல்

இந்த நிகழ்ச்சியின் ஊடாக கலைஞர்களின் திறமைகள் வெளிக்கொணர ப்படுவதுடன், அவர்களும் பாராட்டி கௌரவிக்கப்படுகின்றனர்.

அது மாத்திரமன்றி, கலைஞர்களுக்கு தங்க நாணயங்களை வழங்கி, கலைஞர்களுக்கு முழுமையான கௌவரத்தையும் இந்த நிகழ்ச்சி மூலம் வழங்கப்படுகிறது.

அத்துடன் நின்றுவிடாமல், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நீண்டகால நேயர்களை தெரிவு செய்து, அவர்களையும் கௌரப்படுத்தும் ஒரு நிகழ்ச்சியாகவும் இந்த மதுர கீதங்கள் நிகழ்ச்சி இருக்கின்றது.

அதன்படி, ஒவ்வொரு மாதமும் ஐந்து நேயர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படுகிறார்கள்.

அத்துடன், இந்த நிகழ்ச்சியில் இலைமறை கலைஞர்களுக்கும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு இந்த மாதந்த இசை நிகழ்ச்சி வெகு விமர்சையாக இடம்பெற்று வருகின்றது.

அதன்படி, இம்முறை வெள்ளிக்கிழமை (28.04.2023) மாலை 6.30 மணி தொடக்கம் 8.30 மணி வரையில் மதுர கீதங்கள் இடம்பெறும். இந்த நிகழ்ச்சியை நேரடியாக கண்டுகளிக்க இலவச வாய்ப்பும் வழங்கப்படுகிறது. அத்துடன், இந்த நிகழ்ச்சி தென்றல் அலைவரிசைகளில் ஒலிபரப்பாகும்.

# மட்டு.மாவட்டத்தில் 700 பேர் டெங்கால் பாதிப்பு

## 03 பிரதேசங்கள் அபாய வலயம்; ஒருவர் மரணம்

■ ரீ.எல் ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு, காத்தான்குடி, வாழைச்சேனை மத்தி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருவதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ. சுகுணன் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் ஏப்ரல் 25ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 700 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் 22 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் டெங்கு நோயை ஒழிக்கும் விசேட வேலைத்திட்டங்கள் மாவட்ட ரீதியாக இடம்பெற்று வருவதாகவும் ஒத்துழைக்காதவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய சுற்றுலா பயணி நுாரளையில் மரணம்

■ டி.சந்ரு,

நுவரெலியாவில் உள்ள சுற்றுலா இடங்களை பார்வையிட வந்த இந்திய சுற்றுலாப் பயணி (வயது 68) ஒருவர் திடீரென மரணமடைந்துள்ளார்.

தனது மனைவியுடன் கடந்த 23 ஆம் திகதி இலங்கைக்கு வந்த அவர், நுவரெலியாவுக்கு 25ஆம் திகதி சென்றுள்ளார். அவர் தங்கியிருந்த விடுதியில் இருந்து நகருக்கு, இரவு உணவு உண்பதற்காக மாலை 6.30 மணியளவில் சென்று கொண்டிருந்த போது, திடீரென மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். எனினும், வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு முன்னர் மரணித்துவிட்டார் என்று அறியமுடிகின்றது.

# பஸ்ஸுக்குள் சூதாடிய அறுவர் கைது

கண்டிக்கும் நுவரெலியாவுக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் குளிரூட்டப்பட்ட பஸ்ஸுக்குள் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், சாரதி, நடத்துநர் உட்பட அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியா நகரில் பிரதான சுற்றுலா ஹோட்டலுக்குள் நுழையும் வீதியோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பஸ்ஸுக்குள்ளே இவர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த போது, செவ்வாய்க்கிழமை (25) கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து ஒரு இலட்சம் ரூபாய் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார், அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

# 2ஆம் மொழி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் விரைவில்

2019ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் இரண்டாம் மொழி ஆசிரியர்களாக நியமனம் வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட 1,200 பேருக்கான நியமனங்களை உடனடியாக பெற்றுக்கொடுப்பதற்கு ஆக்கபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அது தொடர்பான அறிக்கையை விரைவாக சமர்ப்பிக்குமாறு பிரதமர் தினேஸ் குணவர்தனவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற ஆளும்தரப்பு கூட்டத்தின்போது இவ்விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்தை ஈர்த்திருந்தேன். இதையடுத்தே ஜனாதிபதி மேற்கண்டவாறு பிரதமரை அறிவுறுத்தினார். ஆகையால், இரண்டாம்மொழி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் மிகவிரைவாகவே கிடைக்கப்பெறும் என்ற நம்பிக்கை எழுந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

14 வயது மகளை பாலியல்

# துஸ்பிரயோகம் செய்த தந்தை கைது

■ கனகராசா சரவணன்

பொத்துவில் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் தனது 14 வயது மகளை பாலியல் துஸ்பிரயோகம் செய்துவந்த பொலிஸ் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரை நேற்று (26) கைது செய்துள்ளதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

தனது 14 வயது மகளை கடந்த மூன்று வருடமாக பாலியல் துஸ்பிரயோகம் மேற்கொண்டுவந்த நிலையில், தேசிய சிறுவர் பாதுகாப்பு சபையின் அவசர பிரிவான 1929 தொலைபேசி இலக்கத்துக்கு பாதிக்கப்பட்ட சிறுமி முறைப்பாடு செய்துள்ளார்.

இதையடுத்து, பொத்துவில் பிரதேசத்தில் பொலிஸ் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றும் 38 வயதுடைய சிறுமியின் தந்தையை கைது செய்ததுடன் பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# மட்டக்களப்புக்கு கனடிய தூதுவர் விஜயம்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான கனடிய தூதுவர் எரிக் வால்ஷ் மற்றும் அவரது அதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு நேற்று முன்தினம் (25) வருகை தந்ததுடன், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையிலான குழுவினருடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதுடன், மாவட்டத்தில் உள்ள வளங்கள் குறித்து கனடிய தூதுவர் அறிந்துகொள்ளும் முகமாக, மாவட்ட செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆர். ஜதீஸ்குமாரால் முன்னளிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட செயலக கணக்காளர் எம். வினோத் மற்றும் மாவட்ட செயலக உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# பெண்ணை அடையாளம் காண உதவவும்

## மட்டு. பொலிஸார் கோரிக்கை

■ கனகராசா சரவணன்



மட்டக்களப்பு, காந்திபூங்காவுக்கு முன்னால் உள்ள வாவியில், மார்ச் மாதம் 25ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில், மட்டு. போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. எனவே இவரை அடையாளம் காண பொதுமக்களின் உதவியை பொலிஸார் கோரியுள்ளனர்.





# கிணற்றுக்குள் விழுந்த யானைகள்

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, முள்ளியவளை தெற்கு கிராம அலுவலகர் பிரிவில் உள்ள களிக்காடு விவசாய கிராமத்தில் உள்ள விவசாய கிணற்றில் தாய் யானையும் இரண்டு குட்டிகளும் விழுந்துள்ளன.

இந்த யானைகள், திங்கட்கிழமை (24) இரவு விழுந்திருக்கலாம் என விவசாயிகள் தெரிவித்துள்ளார்கள். அன்று அருகில் உள்ள வயல் நிலங்களை, யானைக் கூட்டம் ஒன்று நாசம் செய்ததாகவும் விவசாயிகள் தெரிவித்தார்கள்.

யானைகள் கிணற்றில் விழுந்த சம்பவம் தொடர்பில் கிராம அலுவலகருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டு, சம்பவ இடத்திற்கு வந்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானைகளை மீட்டு காட்டில் விட்டனர்.

யானைகள் கிணற்றில் வீழ்ந்துள்ளதைத் தொடர்ந்து, அருகில் இருந்த பற்றைக்காட்டில் யானைக் கூட்டம் ஒன்று நின்றுள்ளதுடன், யானைகளை மீட்கும் நடவடிக்கையின் போது, குறித்த யானைக் கூட்டம் கிணற்றை நோக்கி வந்தவேளை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் வெடிகொழுத்தி யானைகளை கலைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**“ அருகில் இருந்த பற்றைக்காட்டில் யானைக் கூட்டம் ஒன்று நின்றுள்ளதுடன், யானைகளை மீட்கும் நடவடிக்கையின் போது, குறித்த யானைக் கூட்டம் கிணற்றை நோக்கி வந்தன**

# காடழிப்பை வெளிப்படுத்திய ஆசிரியருக்கு மிரட்டல்

■ க. அகரன்

காடழிப்பை வெளிப்படுத்திய ஆசிரியருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதுடன், சமூக வலைத்தளங்களிலும் அவதூறு ஏற்படுத்தப்படுவதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர் நேற்று முன்தினம் (25) வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா, கட்டையர்குளம் பகுதியில் கடந்த சில நாள்களாக இரண்டு கிராம அலுவலர்களின் துணையுடன் காடழிப்பு இடம்பெற்று வந்த நிலையில், சம்பவ இடத்துக்குச் சென்ற கிராம மக்களும், கிராம அபிவிருத்தி சங்கத்தினரும் காடழிப்பைத் தடுத்து நிறுத்தியதுடன், இது தொடர்பில் அரச அதிபரிடமும் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதையடுத்து, குறித்த கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினரும், குறித்த பிரச்சினையை வெளிக் கொண்டு வந்தவருமான ஆசிரியருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய கிராம அலுவலர் ஒருவர், ஆசிரியரை மிரட்டியுள்ளார். போலி முகநூலின் ஊடாக, குறித்த ஆசிரியரின் புகைப்படத்தை பதிவிட்டு அவதூறு ஏற்படுத்தப்பட்டும் உள்ளது.

இதையடுத்து பாதிக்கப்பட்ட ஆசிரியர், இதுகுறித்து வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசனிடம் முறையிட்டுள்ளதுடன், வவுனியா பொலிஸிலும் கிராம அலுவலருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார்.

**“ கிராம அலுவலருக்கு எதிராக, வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசனிடம் முறையிட்டுள்ளதுடன், வவுனியா பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது**

# மன்னார் மாவட்ட செயலகத்தில் தொழிற்சந்தை

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்ட செயலக ஏற்பாட்டில் மாபெரும் தொழிற் சந்தை நிகழ்வு நேற்று (26) மன்னார் மாவட்ட செயலகத்தில், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தில் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்கள் மற்றும் பாடசாலையிலிருந்து இடை விலகியவர்கள் தமது திறன்களை அடையாளம் கண்டு அதனூடாக தமக்கு பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான முன்னெடுப்புகள் இத்தொழிற்சந்தை ஊடாக மேற்கொள்ளப்பட்டன.

தொழிற் சந்தையின் முக்கிய விடயமாக, பயிற்றுவிக்கப்பட்ட வளவாளர்கள் ஊடாக திறன்கள் அடையாளம் காணப்பட்டு, அதற்கான வழிகாட்டலினூடாக ஒவ்வொருவரும் உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் சுமார் 40க்கும் அதிகமான உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் கலந்து கொண்டதுடன் வேலை வாய்ப்பு குறித்து வீதியோர நாடகம் அரங்கேற்றப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

கரடியனாற்றில் புதையல் தோண்ட முயன்ற

# பொலிஸ் அதிகாரி உட்பட நால்வர் கைது




■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள காரக்காடு பகுதியில் புதையல் தோண்ட முயன்ற, மீரிகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பிரதம பொலிஸ் பரிசோதகர் உட்பட நான்கு பேரை விசேட அதிரடிப்படையினர் செவ்வாய்க்கிழமை (25) இரவு கைது செய்து ஒப்படைத்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி. வெளிட்டவிதான வழிகாட்டலில் வவுணதீவு விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரியின் தலைமையிலான அதிரடிப் படையினர் சம்பவதினம் குறித்த பகுதியில் வீதி கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது, காரை வழிமறித்து சோதனையிட்ட போது அதில் உயர் ரக ஸ்கானர் மெசின் மீட்டதையடுத்து, அதில் பிரயாணித்த பிரதம பொலிஸ் பரிசோதகர் உட்பட நான்கு பேரை கைது செய்ததுடன் காரையும் மீட்டனர். கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி, கடந்த மார்ச் மாதத்தில் இருந்து லீவில் இருப்பதாகவும் ஏனையவர்கள் பெந்தோட்டை, சியம்பலண்டுவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பாடசாலை மாணவர்களிடையே கஞ்சா பாவனை அதிகரிப்பு

தங்களுடைய பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பும் பெற்றோர்கள், கண்களுக்குள் விளக்கெண்ணெயை ஊற்றிக்கொண்டு விழிப்பாக இருக்கவேண்டும். அந்தளவுக்கு காலம் கெட்டுக்கிடக்கு; பெண் பிள்ளைகளைப் பாதுகாக்கவும், தீய பழக்கவழக்கங்களை கொண்டவர்களிடமிருந்து ஆண் பிள்ளைகளை பாதுகாக்கவும் பெற்றோர்கள் அரும்பாடுபடுகின்றனர்.

எனினும், கட்டுக்கோப்புடன் வளரும் ஒரு சிலரை தங்களுடைய வலைக்குள் விழச்செய்யும் மோசடிக்கார கும்பல்கள், அவர்களையும் போதைப்பொருள் பழக்கத்துக்கும் ஏனைய தீய செயல்களுக்குள்ளும் இழுத்து விட்டுவிடுகின்றனர்.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் மட்டுமன்றி, இடைவிலகியோரும் தீய பழக்கங்களுக்கு வெகுசீக்கிரமாக அடிமையாகி, கெட்ட செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர். தற்போதைய அவதானிப்புகளின் பிரகாரம், பாடசாலை உபகரணங்கள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள், தேவையான பாடப்புத்தகங்களை கொள்வனவு செய்யமுடியாமையால் இடைவிலகுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நகர்புறங்களுக்கு அப்பால், வடக்கு,கிழக்கு, பெருந்தோட்டங்களில் இடைவிலகுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. முறையான கவனிப்பு இன்மை, அம்மா வேலைத்தேடி வெளிநாட்டுக்குச் சென்றுவிடல், தந்தை மறுமணம் செய்துகொள்ளல், இல்லையேல் குடும்பத்தை கவனிக்காமல் இருத்தல் போன்றவை, மாணவர்கள் கல்வியை இடைநடுவதில் கைவிடுவதற்கு பிரதான காரணங்களாக அமைந்துள்ளன.

இந்நிலையில், ஆய்வொன்றை நடத்தியுள்ள போதைப்பொருள் கட்டுப்பாட்டு சபை, பாடசாலை மாணவர்களிடையே கஞ்சாவை பயன்படுத்தும் போக்கு அதிகரித்து வருவதாக தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள் முதலில் எந்த வயதில் போதைப்பொருளைப் பயன்படுத்தினார்கள் என்பது குறித்த ஆய்வில், 49 சதவீதம் பதினாறு முதல் இருபது வயது வரை முதல் முறையாக பயன்படுத்தியது தெரியவந்தது.

44 சதவீதம் பேர் பதினோரு வயது முதல் பதினைந்து வயது வரை முதல் முறையாக போதைப்பொருளைப் பயன்படுத்தியிருப்பதும் தெரியவந்தது.

இளைஞர்கள் மற்றும் இளம்பருவ போதைப்பொருள் பாவனையின் சராசரி வயது குறித்து தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் நடத்திய ஆய்வில், பதினாறு வயதிலேயே கஞ்சா அதிகம் பயன்படுத்தப்படுவது தெரியவந்துள்ளது.

கடந்த காலங்களில் துலே, மாவா, பாபுல் போன்ற போதைப்பொருட்கள் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பரவலாகப் பரவியிருந்த நிலையில், அண்மைக் காலமாக ஐஸ் போதைப்பொருள் பரவும் போக்கு அதிகரித்துள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் கஞ்சா பாவனைக்கு அதிக நாட்டம் காட்டுவதால் அதனை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆபத்தான போதைப்பொருள் தடுப்பு தேசிய சபையின் பேச்சாளர் சாமர கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

ஏனைய போதைப்பொருட்களை விடவும் கஞ்சாவை குறைந்தவிலையில், நாட்டின் பல பாகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை கவனத்தில் கொண்டும், மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டும் அதிரடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது ஆபத்தான போதைப்பொருள் தடுப்பு தேசிய சபையின் கடப்பாடாகும் என்பதை நினைவூட்டுகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்


www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.


அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

வாய்வீச்சுப் பேச்சுகள் கௌரவத்தைக் குறைக்கும். எதுவுமே புரியாமல், சிலர் பேசிக்கொண்டிருப்பார்கள். தங்கள் பேச்சை மற்றவர்கள் கேட்டேயாக வேண்டும் என எண்ணுவதே தவறு!

மேலும், தப்பான விடயங்களை ஆதரித்துப் பேசும்போது, கேட்பவர்களுக்கு கோபம் வந்துவிடுகின்றது.

தர்க்கம் என்பது பொய்யை உண்மை என்று வாதிடுவது அல்ல; பொய்யை உண்மை என்று வாதிடுபவரை மக்கள் நிராகரித்துவிடுவார்கள்.

சிலர் எப்பொழுதும் விமர்சனம் செய்தபடியே இருப்பார்கள். எவர் எதைச் சொன்னாலும் அது கெடுதல் தருவதாக இருந்தால், அதை உதாசீனம் செய்துவிடுவதே நல்லது.


விமர்சனம் என்பது எவரையும் தாக்குவது மட்டும்தான் என எண்ணுபவர்கள் நம் மத்தியில் அதிகம் பேர் வாழுகின்றார்கள். தவறுகளைத் திருத்துவதற்கு உதவுவது நன்மைதரும்.

அனுபவம் இல்லாதவர் விமர்சனம் செய்வது, நகைப்பூட்டும் செயலாக அமைந்துவிடும். பேச்சுச் சுதந்திரத்தை கண்டபடி பாவிக்கக்கூடாது.

மற்றவர்களைக் குறை சொல்லியே வாழ்பவர்கள் எதையும் சாதிக்க மாட்டார்கள்; நல்லதைக் கேட்கவும் மாட்டார்கள். அமைதியாக, அழகாக, நிதானமாகப் பேசுக!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இலக்கை மறந்த தமிழர் அரசியல்



புருஜோத்தமன் தங்கமயில்

முள்ளிவாய்க்கால் முடிவுகளின் பின்னரான, தமிழ்த் தேசிய அரசியலின் செல்நெறி தொடர்பில், தொடர்ச்சியாக கேள்வி எழுப்பப்பட்டு வந்திருக்கின்றது. அது, தமிழ் மக்களின் அரசியல், விடுதலை எனும் இலக்கை மறந்து நின்று, அன்றாடம் நிகழும் சம்பவங்களுக்குப் பிரதிபலிப்பது மாத்திரமே அரசியல் எனும் கட்டத்தில், தமிழ்த் தேசிய அரசியலை இன்றைய கட்சிகள் கொண்டு வந்து நிறுத்தி இருக்கின்றன. இலங்கை தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தொடங்கி, தற்போது புதிது புதிதாக முளைக்கும் எந்தத் தமிழ்க் கட்சியும் கூட, இப்படியான இயங்குநிலையையே கொண்டிருக்கின்றன.

நிகழ்வுகளுக்கு அல்லது சம்பவங்களுக்கு பிரதிபலிக்கும் அரசியல் என்பது பெரிய உழைப்பை கோருவதில்லை. கண்டன அறிக்கை, ஊடக சந்திப்பு அல்லது சில மணிநேர எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் என்கிற அளவில், இந்த அரசியலை குறுக்கிக் கொண்டுவிடலாம்.

மற்றப்படி, மூளைக்கு பெரிய வேலையையோ, நாளாந்தம் மக்களைச் சந்தித்து அவர்களின் நிலைப்பாடுகளைப் முன்னெடுக்கும் செயற்பாடுகளையோ செய்யத் தேவையில்லை.

விடுதலை அரசியல் குறித்த சிந்தனை இருக்கும் எந்தவொரு தரப்பும் உடல், பொருள், ஆவியை அர்ப்பணித்து உழைப்பதற்கு தயாராக இருக்க வேண்டும். எந்த நேரத்திலும் எதற்கும் தயாராக இருக்க வேண்டும். அதுதான், மக்கள் விடுதலை குறித்துச் சிந்திக்கின்ற எந்தவொரு மனிதனும் தலைவனாகவும், வழிகாட்டியாகவும் மாறுவதற்கான வழியாகும்.

தந்தை செல்வா, தலைவர் பிரபாகரன் என்கிற ஓரிரு தலைவர்களைத் தவிர்த்தால், தமிழர் அரசியலில் அர்ப்பணிப்பு குறித்த சிந்தனையோடு இருந்த தலைவர்கள் என்று அடையாளப்படுத்திக் கூறும் அளவுக்கு யாரும் இல்லை.

தேர்தல் வெற்றியும், அதன் மூலமான பதவிகளையும் குறிவைத்தே தமிழ்த் தேசிய அரசியலை பெருமளவு காலமும் தமிழ்க் கட்சிகள் நகர்த்தி வந்திருக்கின்றன. ஆட்சி அதிகாரம் என்கிற நிலையை அடைவது குறித்து, தமிழ்த் தேசிய கட்சிகள் சிந்திக்காவிட்டாலும், தமிழர் தாயகத்தில் தாங்களே தீர்மானம் எடுக்கும் சக்திகள் எனும் நிலையைப் பேணுவதன் மூலம், சில சலுகைகளை உள்நாட்டுத் தரப்புகள் மற்றும் வெளித் தரப்புகளிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பது, தமிழ்த் தேசிய கட்சிகள் பெரும்பாலானவற்றின் தலைவர்களின் எண்ணமாக காணப்படுகின்றது. அந்த எண்ணப்பாடுதான், ஒவ்வொரு கட்சியையும் பல கூறுகளாகப் பிளந்து வைத்திருக்கின்றது.

இன்றைக்கு தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் அனைத்துக் கட்சிகளும், பிராந்திய வல்லரசு தொடங்கி மேற்கு நாடுகள், சீனா வரையில் தங்களின் கைகளுக்குள் வைத்துக் கொள்ள நினைக்கின்றன. ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு கட்சிக்குள்ளும் தனக்கு இணக்கமானவர்களை அடையாளம் கண்டு அவர்களை, தங்களது நிகழ்ச்சி நிரலை நிகழ்த்துவதற்கான முகவர்களாக வைத்துக் கொள்கின்றன.

அதனால், அவர்கள் கட்சி நலன், தமிழ் மக்களுக்கான அரசியல் என்று அனைத்தையும் மறந்துவிட்டு, செயற்படுகின்றனர். அதையே, தங்களை பின்தொடரும் கட்சி ஆதரவாளர்களிடமும் விதைக்கின்றனர். இதனால், தமிழ் மக்களை மதவாத, சாதியவாத அடிப்படையிலும் பிரதேச வாதத்தாலும் பிளவுபடுத்தும் வேலைகளைச் செய்கின்றனர். இவை, தமிழ்த் தேசிய அரசியலை செங்குத்தாக கீழ்நோக்கி தள்ளும் செயற்பாடுகளாகும்.

தமிழர் தாயகம் எங்கும் புத்தர் சிலைகளை வைத்தும், விகாரைகளைக் கட்டியும் சிங்கள பௌத்தம், ஆக்கிரமிப்பு அரசியலை செய்து வருகின்றது. அதற்கு எதிராக மூர்க்கமாகப் போராடுவதை விடுத்து, தமிழர் பரப்புக்குள் சிவன் சிலை, சிவலிங்கம் அமைப்பு என்று வீதிகளை ஆக்கிரமித்து, மத நல்லிணக்கத்துடன் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நிகழ்வுகளின் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்பதும், இந்துத்துவா அடிப்படைவாத சிந்தனையை தமிழ் மக்களுக்குள் விதைக்கும் செயற்பாடுகளுக்கு ஒத்தூதும் சம்பவங்களும் நடைபெறுகின்றன.

> **ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு கட்சிக்குள்ளும் தனக்கு இணக்கமானவர்களை அடையாளம் கண்டு அவர்களை, தங்களது நிகழ்ச்சி நிரலை நிகழ்த்துவதற்கான முகவர்களாக வைத்துக் கொள்கின்றன**

ஓர்ஆலயத்தையோ,வழிபாட்டிடத்தையோ அமைப்பது நம்பிக்கைகளின் அடிப்படையில் மனிதம் செய்யக் கூடிய ஒன்று! அந்த உரிமையில் யாரும் தலையிட முடியாது. ஆனால், பொதுவான இடத்தில், திடீரென சிலைகளை அமைத்து, அதை வழிபாட்டிடமாக மாற்ற முயல்வது என்பது, குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட செயற்பாடு. அவ்வாறான செயற்பாடுகளின் பின்னணி தொடர்பில் தமிழ் மக்கள் அவதானமாக இருக்க வேண்டியிருக்கிறது.

இப்படியான கட்டங்களில், தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற கட்சிகள், அவற்றைக் கவனமாக கையாள நினைக்க வேண்டும். ஆனால், அதனை மறந்து நின்று, பிளவுகளுக்குத் துணைபோவது என்பது, வரலாற்று துரோகத்துக்கு வாய்ப்பை ஏற்படுத்துவதாகும்.

> **விடுதலைக்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தாக எந்தவொரு தலைவரிடமும் விடுதலை குறித்த இலக்கு இருக்க வாய்ப்பில்லை**

இன்னொரு பக்கம், மேற்கு நாடுகளின் நிதியுதவியோடு வரும் கிறிஸ்தவ அமைப்புகளும் தமிழ் மக்களிடம் காணப்படும் மதநல்லிணக்கம் எனும் நிலையை சீரழிக்கும் வேலைகளைச் செய்கின்றன. புதிது புதிதாக வரும் கிறிஸ்தவ சபைகள், ஏழை எளிய மக்களைக் குறிவைத்து பிரித்தாளும் அரசியலை செய்கின்றன. ஏனைய மதத்தினரை நோக்கி, 'சாத்தான்கள்' எனும் வாசகத்தை அவர்களின் காதுகளில் விழும் அளவுக்கு சொல்கின்றன.

இந்த நிகழ்வுகள், மத நல்லிணக்கத்தோடு இருக்கும் தமிழ் மக்களிடையே, பிளவுகளை ஏற்படுத்த நினைக்கும் அடிப்படைவாத சக்திகளுக்கு துணைபோகும் செயற்பாடுகளாகும். ஒவ்வொரு மனிதனும் தான் நம்பும் இறைவனை, மதவழிபாட்டை தேர்வு செய்யும் உரிமையுள்ளவன். அதில், யாரும் தலையிட முடியாது. அதுபோல, மற்றவர்களின் மத நம்பிக்கையையும் இழிவு செய்யாமல் இருக்க வேண்டும்.

ஆனால், தமிழர் தாயகத்தில் அண்மைய நாள்களில் மற்றைய மதத்தினரை கோபப்படுத்தும் வேலைகளில் புதிது புதிதாக வரும் கிறிஸ்தவ சபைகள் செய்கின்றன. இவ்வாறான நிகழ்வுகளையும் தமிழ் கட்சிகளோ, தலைவர்களோ கண்டும் காணாமல் இருப்பது என்பது, பாரதூரமான விளைவுகளை ஏற்படுவதற்கு துணைபோகும் செயற்பாடாகும்.

ஏற்கெனவே, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் காலம், தேர்தல் காலம் என்ற அளவில் தமிழர் அரசியல் சுருங்கிவிட்டது. இந்தக் காலங்களில் மாத்திரம் ஒவ்வொரு கட்சியும், தலைவர்களும் நாளைக்கே, தனிநாடு வாங்கிக் கொடுத்து விடப்போவது மாதிரியான வீராவேசமாகப் பேசுவார்கள்.

இந்தக் காலங்கள் முடிந்ததும், அந்தத் தலைவர்களையே காணக் கிடைக்காது. கொஞ்சமும் வியர்வை வழிந்துவிடாமல் இருந்து அரசியல் செய்ய வேண்டும்; அதன்மூலம் பதவி பெற்று சுகமாக காலத்தைக் கடத்திவிட வேண்டும் என்பதைத் தவிர, எந்த எண்ணத்தையும் தமிழர் அரசியலில் இருக்கும் எந்தத் தலைவரும் இப்போது வெளிப்படுத்துவதில்லை.

விடுதலைக்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தாக எந்தவொரு தலைவரிடமும் விடுதலை குறித்த இலக்கு இருக்க வாய்ப்பில்லை. அப்படிப்பட்ட தலைவர்கள் வாய்க்கப்பெற்ற கட்சிகளோ, அதன் தொண்டர்களோ கூட, உழைப்பும் வியர்வையும் இன்றி சுகமான வாழ்க்கைக்கான வழித்தடமாக, தேர்தல் அரசியலை நினைக்கிறார்கள். அதற்காக மாத்திரம், நாடகங்களை அவர்கள் ஆடியும் வருகிறார்கள்.

விடுதலை இலக்கு தொடர்பில் எந்தவொரு கட்சியோ, அதன் தலைவர்களோ இதுவரை ஏதாவது செயற்றிட்டத்தை மக்களிடம் முன்வைத்து இருக்கிறார்களாக என்றால், அது இல்லை. ஏன் குறைந்தபட்சம், அடுத்த தலைமுறையிடமாவது நேர்மையான அரசியலை கொண்டு சேர்க்க நினைக்கிறார்களா என்றால், அதுவும் இல்லை.

மாறாக, தங்களுக்கு அடிமை சேவகம் செய்வதற்கான குண்டர் கூட்டத்தை மட்டுமே கட்சி அரசியலுக்குள் கொண்டு வரும் நோக்கத்தோடு செயற்படுகிறார்கள்.

இப்படியான குறுகிய நோக்கங்களைக் கொண்டவர்களை, வெளிநாட்டுத் தூதரகங்களின் கடைநிலை அதிகாரி கூட, இலகுவாகக் கையாண்டு விடுகிறார்கள். அந்த அதிகாரியின் ஒரு தொலைபேசி அழைப்பையே, பெரிய விடயமாக இந்த அரசியல் தலைவர்கள் கருதுகிறார்கள். இப்படியான சிந்தனை கொண்ட தலைவர்களை வைத்துக் கொண்டு, இன விடுதலை பற்றிச் சிந்திப்பது எல்லாம் உண்மையில் மகா அபத்தமாகும்.

தமிழர் விடுதலைக்காக ஆயிரமாயிரம் உயிர்கள் அர்ப்பணிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அர்ப்பணிப்புகள் அர்த்தம்பெற வேண்டுமென்றால், குறைந்த பட்சம் தமிழ்த் தேசிய அரசியல் பதவி, பகட்டு, குழிப்பறிப்பு, சோரம்போகும் நிலை எனும் கட்டங்களுக்கு அப்பால் நின்று, செயற்பாட்டு அரசியலை முன்னெடுக்க வேண்டும்.

இல்லையென்றால், குருதி குடிக்கும் அட்டைகளிடம் மாட்டியது மாதிரி, தமிழ்த் தேசிய அரசியலும் அதன் ஆன்மாவை மெல்ல மெல்ல இழக்கும். அப்போது, எதிரிகளும் துரோகிகளும், இலகுவாக தமிழர் இன விடுதலை சிந்தனையை முழுவதுமாக சிதைத்துவிடுவார்கள்; பாரம்பரிய மண்ணில் தமிழ் மக்களின் இருப்பையும் இல்லாமலாக்கி விடுவார்கள்.

## கடிதங்கள்

### அட்டப்பள்ளத்தை அதிரடியாக அரிக்கும் ஆழி



அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரிவுக்கு உட்பட்ட அட்டப்பள்ளம் கடற்கரைப் பிரதேசம் மிகவும் மோசமாக கடல் அரிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது. கடந்த சில நாள்களாக கடலுக்கு அருகே உள்ள தென்னை மரங்களைக் காவு கொண்டும் கட்டடங்களை உடைத்தும் சேதம் விளைவித்து வருகிறது .

நிறைய தென்னை மரங்களை உள்வாங்கிய கடல், அருகிலுள்ள மீனவர் கட்டடம், கிணறு என்பவற்றையும் உள்வாங்கி வருகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அட்டப்பள்ளம் கடற்கரைப் பிரதேசத்தை அண்டி வாழும் மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.

வி.ரி சகாதேவராஜா



## பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் கல்வி நிலை

# கேள்விக்குறி




எஸ்.றொசேரியன் லெம்பேட்


**நாட்டின் சமகால பொருளாதார நெருக்கடி, நலிவடைந்த மக்கள் பலரின் வாழ்க்கையிலும் வெகுவாகத் தாக்கம் செலுத்தியுள்ள நிலையில், பாடசாலை செல்கின்ற பிள்ளைகளின் கல்விச் செலவை ஈடுசெய்ய முடியாத நிலையில் திண்டாடும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி குறித்து ஆராய்ந்தோம்.**

எவ்வளவு தடைகள் ஏற்பட்டாலும் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எதிர்காலத்தில் தமது பிள்ளைகள் எதிர்கொள்ளக் கூடாது என்ற மனப்பாங்குடன், பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் உள்ள பெண்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைக்கின்றனர். வடக்கு கிழக்கில் பல்வேறு விதங்களில் பெண்கள் பலரும் பெண் தலைமைத்துவ குடும்பங்களாக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு போர் காரணமாக அதிக பாதிப்புகளையும், பொருளாதார நெருக்குதல்களையும் எதிர்கொண்ட சமூகமாகவும் பெண் தலைமைத்துவ குடும்பங்களே காணப்படுகின்றன.

தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என அனைவரும் இதில் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான பாதிப்புகளில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள், அவர்களைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளன.

வடக்கு மாகாணத்தில் சுமார் 54 ஆயிரத்து 532 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளதாக வடமாகாண மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.


நாடு முழுவதிலுமுள்ள ஏனைய மாகாணங்களிலும் பாதிப்புகள் வடக்கு, கிழக்கை விடக் குறைந்தளவானதே.



வினோதா

"நான் கணவனை பிரிந்து வாழ்ந்து வருகின்றேன். எனக்கு பாடசாலைக்குச் செல்லும் 4 பிள்ளைகள் உள்ளனர். பிள்ளைகளுக்கு நாள் ஒன்றுக்கு குறைந்தது 800 ரூபாய் வரை தேவைப்படுகிறது" என்கிறார் முள்ளியவளையைச் சேர்ந்த 46 வயதான வினோதா.

"பிள்ளைகளின் கல்விக்காகவும், குடும்ப செலவீனங்களுக்காகவும் கூலி வேலை செய்து வருகிறேன். கிடைக்கிற நாளாந்த வருமானம் பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதல்ல. வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டால், பிள்ளைகளின் கல்விச் செலவையும் இதர தேவைகளையும் ஈடுசெய்து கொள்வேன். இதன் மூலம் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை தங்கு தடைகள் இன்றி முன்னெடுக்க என்னால் முடியும். நாங்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை எமது பிள்ளைகள் எதிர்நோக்கக் கூடாது. அதற்காக அவர்கள் சிறப்பாக கற்க வேண்டும்" என்று வினோதா எதிர்பார்ப்புகளை பகர்கிறார்.



சுகந்தி

முல்லைத்தீவு, கரும் புள்ளியானில் வாழும் கோகுலன் சுகந்திக்கு மூன்று பிள்ளைகள். மூவரும் பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றனர்.

"அப்பியாசக் கொப்பிகளின் விலை ஏற்றத்தால் கொப்பிகளை வேண்ட சவால்களை சந்தித்தோம். கடந்த காலங்களில் குறைந்த விலையில் தேவையான அப்பியாச கொப்பிகளை வேண்ட முடிந்தது. தற்போதைய சூழ்நிலையில் ஓர் அப்பியாசக் கொப்பியை வேண்ட 200 ரூபாய் தேவைப்படுகிறது. ஒரு பிள்ளைக்கு ஒரு தவணைக்கு அப்பியாசக் கொப்பியை கொள்வனவு செய்ய சுமார் 6,500 ரூபாய் வரை தேவைப்படுகிறது" என்றார்.



அனுதீபா

"விவசாய நடவடிக்கையில் ஈடுபடுகிறேன். பிள்ளைகளின் கல்விச் செலவு, குடும்பச் செலவு என்பவற்றை ஈடு செய்ய முடியாத நிலையில் நாளாந்த பொழுதை கழிக்கின்றோம்" என விரக்தியோடு கூறினார் அனுதீபா.

கால்நடை வளர்ப்பை வாழ்வாதாரமாகக் கொண்டு, தனது மகளின் கற்றல் செயற்பாடுகளையும் குடும்ப செலவினங்களையும் கட்டிக்காத்து வந்த கரும்புள்ளி யானைச் சேர்ந்த அனுதீபா, தனது கால்நடைகளில் 4 மாடுகள் நோயால் இறந்து விட்ட நிலையில், 3 மாடுகளை மாத்திரம் தற்போது வளர்த்தவாறு, குடும்ப செலவுக்கும் பிள்ளையின் கல்வி செலவுக்கும் இடையே போராடி வருகின்றார்.

தலை மீது சுமத்தப்பட்ட குடும்ப பாரத்தை தணிப்பதற்காக கிராமத்தில் கிடைக்கும் கூலி வேலைகளுக்கும் அனுதீபா செல்கின்றபோது, வாழ்க்கைச் செலவு மும்மடங்காக அதிகரித்ததால், கூலியாகக் கிடைக்கும் வருமானத்தில் குடும்ப செலவுகளை ஈடுகட்ட முடியாதவளாக, சுயதொழில் வாய்ப்பொன்று அமையப்பெற்றால், பிள்ளையின் கல்வி செலவுகளையும் ஈடுசெய்து முன்னேற முடியும் என்பது அவளது எதிர்பார்ப்பாக உள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் 2 ஆம் வருடத்தில் கல்வி கற்று வரும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தீபனுக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர்.

ஒரு சகோதரி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருகிறார். இன்னும் ஒரு சகோதரி சாதாரண தரம் படித்து வருகிறார். மூவரது கல்விச் செலவும் கால் நடையை மையப்படுத்தியே அமைந்துள்ளது. அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்தே படிப்பு உள்ளடங்கலாக இதர தேவைகளையும் ஓரளவேனும் பூர்த்தி செய்து கொள்கின்றனர். தனது தாயால் குடும்பச் செலவை சமாளிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும், சகோதரி உயர்கல்வியை கைவிட நேரும் நிலையில் உள்ளதாக தமது குடும்பத்தின் எதிர்காலத்தை நினைத்து விரக்தி அடைகின்றார்.



சோபாலிக

வவுனியா சலலீலீகம பகுதியைச் சேர்ந்த எச். எம்.சோபாலிக, கணவனை இழந்த நிலையில், 3 பிள்ளைகளோடு வறுமையில் வாடுகிறார். "வயல் மற்றும் தோட்ட வேலைக்கு சென்று பணம் சம்பாதிக்கிறேன். தற்போது மின்சார கட்டணம் அதிகரித்துள்ளது.தோட்டத்திற்கு கிணற்றில் இருந்து தண்ணீர் இறைக்க வேண்டும்.இதனால் அதிக மின்சாரம் விரயமாகிறது. அதிக மின் கட்டணத்தை செலுத்த வேண்டும். தோட்டச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. மூன்று பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கான உணவு, பாடசாலைக்கான செலவீனங்களை செய்ய முடியாத நிலையில் நிக்கின்றேன்" என கவலை கொள்கிறார்.



சுவர்ன லதா

"எனது கணவர் யுத்தத்தின் போது மரணித்து விட்டார். எனக்கு 5 பிள்ளைகள் உள்ளனர்.4 பிள்ளைகள் திருமணம் முடித்து விட்டனர். நானும் எனது கடைசி பிள்ளையும் உள்ளோம். தற்போதைய பொருளாதார நிலை காரணமாக நான் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றேன்.திருமணம் முடித்த பிள்ளைகளுக்கு உரிய தொழில் வாய்ப்பு இல்லை. இதனால் எனது கடைசி பிள்ளையின் பாடசாலை செலவு மற்றும் குடும்பச் செலவை ஈடு செய்ய முடியாத நிலையில் உள்ளேன். எனக்கு சிறு வயதில் காலில் ஏற்பட்ட காயம் தற்போது பாதிப்பை ஏற்படுத்துகின்றது. தொடர்ந்தும் என்னால் கூலி வேலை செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது" என அடுத்த கட்டம் நோக்கிய பயத்தை வெளிப்படுத்தினார் வவுனியா குடாகட்டி குடி பகுதியைச் சேர்ந்த யூ.சுவர்ன லதா.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட 345 கிராம அலுவலர் பிரிவுகளில்,யுத்தத்தால் கணவனை இழந்த, அங்கவீனமுற்ற கணவர்,கணவனை பிரிந்து வாழ்தல்,கணவன் தடுப்பில் இருத்தல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பெண் தலைமைத்துவ குடும்பங்களாக 34 ஆயிரத்து 155 குடும்பங்கள் காணப்படுவதாக மட்டக்களப்பு மாவட்டச் செயலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.



வசந்தி

றொசாந்தனின் தாயாரும் முன்னாள் போராளியுமான வசந்தி, தனது மனதில் இருந்தவற்றை பேச ஆரம்பித்தார்,

"நான் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி.15 வயதில் இணைந்து கொண்டேன்.1998 ஆம் ஆண்டு எனது கண்,முகம்,காது போன்றவை பாதிக்கப்பட்டன. தற்போது நான் குடும்பத்துடன் இணைந்து வாழ்ந்து வருகின்றேன். என்னைப் பார்க்க ஒருவரும் இல்லை. நான் வீடு வீடாக சென்று வீட்டு வேலை பார்ப்பது,தேங்காய் துருவி கொடுப்பது எனது வேலை. எனக்கு 250 ரூபாய் பணம் தருவார்கள். அந்தப் பணம் போக்குவரத்திற்கு காணாது. எனது தாய் தந்தையர்கள் வயது போனவர்கள்.தந்தைக்கு 85 வயது. அவர் படுக்கையில் உள்ளார். வீட்டு வேலை செய்து கிடைக்கின்ற பணத்தை வைத்து அவர்களையும் நான் தான் பார்க்கின்றேன். எனது உடலில் பல காயங்கள் உள்ளன. வெயிலில் சென்று வேலை செய்ய முடியாத நிலை உள்ளது.இருந்தும் எனது பிள்ளைகளையும் படிக்க வைக்கிறேன். நான் வீட்டில் இருந்தே சுயதொழில் செய்ய வேண்டும். ஆனால் அவ்வாறான சுய தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது. எனக்கு வீட்டில் இருந்து தொழிலை மேற்கொள்ள உதவி செய்தால் எனது பிரச்சினைகள் ஓரளவுக்கு தீரும். தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக நான் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளேன். எவ்வித கொடுப்பனவுகளும் அரசாங்கத்தால் இதுவரை எனக்கு கிடைக்கவில்லை. எனவே எனக்கு சுயதொழில் மேற்கொள்ள அரசாங்கமும் சரி, அரச சார்பற்ற நிறுவனங்களாக இருந்தாலும் சரி உதவி புரிந்தால் எனது வாழ்க்கையை முன்னோக்கி கொண்டு சென்று எனது பிள்ளைகளின் கல்வியை இடையூறின்றி கொண்டு செல்ல முடியும்.

எங்களுக்கு தாய் தந்தை இல்லை.எனக்கு ஐந்து சகோதரிகள் உள்ளனர்.எனது கணவர் கூலி வேலை செய்து வருகிறார்.எனது சகோதரிகளை நானே பார்க்கிறேன்; படிக்க வைக்கிறேன்.

கண்டி ஹந்தானை தோட்டத்தில் லயன் குடியிருப்பு 8 இல் சுமார் 17 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அக் குடியிருப்பாளர்களில் ஒருவரான 40 வயதுடைய ஜெயமலர்.

தானும் மகளும் தனது தாயாருடன் வசித்து வருவதாகவும். வாழ்வாதாரத்திற்காக கூலித் தொழில் கிடைப்பதில்லை என்றும் தேயிலை கொழுந்து பறிக்கும் வேலையும் குறை வந்தமையினால் பொருளாதார ரீதியில் கடுமையாக பாதிக்கப்பட்டோம் என கஷ்டங்களைப் பகிர்ந்தார்.



அனுஷா

இவரது மகள் அனுஷா, கண்டி மகாசிங்க ம.வி பாடசாலையில் தரம் 8 இல் கல்வி கற்று வருகின்றாள். தோட்டத்தில் இருந்து நாளாந்தம் பாடசாலைக்கு ஓட்டோவில் செல்கின்றாள். ஓட்டோ வண்டிக்கான கட்டணமாக மாதம் 5,000 ரூபாய் செலுத்த வேண்டிய நிலையில் தனது தாயார் காணப்படுகிறார் என்ற விடயத்தைச் சுட்டிக்காட்டியவாறு பேச ஆரம்பித்தாள்.

"அம்மா சிந்தும் ஒரு துளி வியர்வையும் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்ற வைராக்கியத்தோடு, எனது கல்வி நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றேன்.

தமிழரான நான் எனது கல்வியை சிங்கள மொழி மூலம் கற்று வருகிறேன். தற்போது தமிழை விட சிங்களத்தையே அதிகம் கதைக்க எழுத கற்றுக் கொண்டுள்ளேன். எதிர்காலத்தில் இந்த நாட்டில் சிங்கள மொழி தெரிந்து இருந்தால் தான் அரச வேலை வாய்ப்புகளை'பெற்றுக்கொள்ள முடியும் என்ற எதிர்பார்ப்புடன் எனது கல்வியை முன்னெடுத்து வருகின்றேன். எனது தாயின் கூலி தொழிலிலேயே எனது கல்வி தங்கி இருக்கிறது". என தாயின் அர்ப்பணிப்பையும் கல்வி மீதான நம்பிக்கையையும் பகர்ந்தாள்.

வடக்கில் மாகாணத்தில் உள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களில் உள்ள பெண் முயற்சியாளர்கள் குறித்து மாகாண தொழில்துறை திணைக்கள பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணத்தை தொடர்பு கொண்டபோது,



திருமதி வனஜா

"வடக்கில் தற்போது வரை 3,514 பெண் தலைமைத்துவ குடும்பங்களைச் சேர்ந்த பெண் முயற்சியாளர்கள் பதிவு செய்துள்ளனர். பலர் பதிவுகள் இன்றி தன்னிச்சையாக இயங்கக் கூடும்" என தெரிவித்தார். ஏனையவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்றும் கூறினார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுயதொழில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடேவிடம் வினவியபோது,




ஜாட்சன்

"கொரோனா பரவலை தொடர்ந்து நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்த நிலையில் காணப்பட்டது. இதனால் பொருட்களின் விலையேற்றம் அதிகரித்து, பாதிக்கப்படுவது பெண் தலைமைத்துவ குடும்பங்களும் குறித்த குடும்பத்தில் உள்ள மாணவர்களுமேயாகும்.

பிள்ளைகளுக்கான உணவு மற்றும் பாடசாலை கற்றல் உபகரண்ங்களை கொள்வனவு செய்ய என பாரிய பொருளாதார நெருக்கடியை சந்திக்கின்றனர். பாடசாலை அதிக காலம் மூடப்பட்ட மையால் அவற்றை மீள பெற்றுக்கொள்ள அவர்கள் தனியார் கல்வியையும் அதிக அளவில் நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் இவற்றை ஈடுசெய்ய, பெண் தலைமைத்துவ குடும்ப பெண்களுக்கு நாட்டில் உரிய தொழில் வாய்ப்பு இல்லை. தமது பிள்ளைகளின் கல்வி செலவு உள்ளடங்கலாக ஏனைய தேவைகளை பூர்த்தி செய்ய இவர்களிடம் நிதி வசதி இல்லை. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் பெண் தலைமைத்துவ குடும்பங்களை அடையாளம் கண்டு, அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்சார்பு பொருளாதாரத்தை மேம்படுத்த சுயதொழில் நடவடிக்கைகளுக்கு அவர்களை உள்வாங்கி வருகின்றனர்.

மெசிடோ நிறுவனம் வடக்கு, கிழக்கு உள்ளடங்கலாக நாட்டில் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு தற்சார்பு பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் சுய தொழில் உற்பத்தியை ஊக்கப்படுத்தி வருகிறது.

கருவாடு பதனிடுதல், சவர்க்கார உற்பத்தி, வீட்டுத்தோட்டம், சேதனைப் பசளைப் பயன்படுத்தி நஞ்சற்ற நெல் உற்பத்தி, கோழி வளர்ப்பு உள்ளிட்ட சுயதொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகிறோம்.

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அடையாளப் படுத்தப்பட்டால் அவர்கள் பெண்கள் குழுக்கள் ஊடாக அவர்களுக்கு பொருளாதாரத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் தற்சார்பு பொருளாதார சுயதொழில் நடவடிக்கையை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்" என்றார்.

பொருளாதார நெருக்கடியை முற்றிலுமாக சமாளிக்க கூடிய நிலையில் நடுத்தர குடும்பங்களோ வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களோ இல்லை என்பதே உண்மை. அரசாங்கம் இக்குடும்பங்கள் மீள்எழுச்சி பெறுவதற்கான நடைமுறையான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

சூடான்

# 278 பேரை காப்பாற்றிய ‘காவேரி’

ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவம் மற்றும் துணை இராணுவ படைகளுக்கு இடையே கடந்த சில நாள்களாக மோதல் நிலவி வருகின்றது.

இந்த உள்நாட்டு போரால் இதுவரை 420 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப்போரில் சிக்கி தவிக்கும் இந்தியர்களை ‘காவேரி நடவடிக்கை’ என்ற பெயரில் மீட்கும் பணிகள் இந்திய அரசால் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் சூடான் துறைமுகத்தில் இருந்து இந்தியர்கள் 278 பேருடன்





ஐ.என்.எஸ்.சுமேதா கப்பல் சவுதி அரேபியாவின் ஜெட்டா நகருக்கு புறப்பட்டது.

இதனையடுத்து முதற்கட்டமாக மீட்கப்பட்ட குழந்தைகள் மற்றும் பெண்கள் ஜெட்டாவிலிருந்து விமானப்படை விமானங்கள் மூலம் இந்தியாவிற்கு அழைத்து வரப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்கம்

## ஊரைக் கூட்டி ஆலமரத்துக்கு திருமணம்



பெண் ஒருவர், ஊரைக் கூட்டி ஆலமரத்துக்குத் திருமணம் செய்துவைத்த விநோத சம்பவம் மேற்கு வங்கத்தில் இடம்பெற்றுள்ளது.

மேற்கு வங்கத்தில் உள்ள மேமாரி நகரத்தைச் சேர்ந்தவர் ரேகா தேவி. இவர் தனது மகனாக நினைத்து, நீண்ட காலமாக ஆலமரமொன்றை வளர்த்து வந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த மரத்திற்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என எண்ணிய அவர், அண்மையில் தனது நண்பர்களையும் அக்கம்பக்கத்தினரையும் அழைத்து பாரம்பரிய முறைப்படி அம்மரத்திற்குத் திருமணம் செய்து வைத்துள்ளார்.

இதன்போது பூசாரி மரத்திற்கு வேட்டியை அணிவித்து, அதன் உச்சியில் வர்ணம் பூசினார். இதைக்காண ஏராளமான உள்ளூர்வாசிகள் அங்கு கூடினர்.

இச்சம்பவமானது அப்பகுதி மக்கள் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய பிரதேசம்



## அச்சமூட்டும் விநோத உயிரினம்; பீதியில் மக்கள்

மத்திய பிரதேசத்தில் உள்ள போபால் குளத்தில் அச்சமூட்டும் வகையில் காணப்பட்ட விசித்திர உயிரினமொன்றைக் கண்டு மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இது பார்ப்பதற்கு முதலை போன்ற தலை மற்றும் கூர்மையான பற்களைக் கொண்டு காணப்பட்டுள்ளது.

இது குறித்த வீடியோவானது இணையத்தில் வைரலானதைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் ‘இவை அலிகேட்டர் கார்ஃபிஷ்’ எனப்படும் மீன்கள் எனவும் இவை வட அமெரிக்காவில் அதிகளவில் காணப்படும் என்றும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து இவை எவ்வாறு இங்கு வந்துள்ளன என்பது குறித்து வனத்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் இவை ஏனைய மீன்களுக்கு தீங்கு விளைவிப்பதோடு சுற்றுச்சூழல் அமைப்புக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வல்லுனர்களின் கூற்றுப்படி, அலிகேட்டர் மீன்களின் ஆயுட்காலம் 18-20 ஆண்டுகள் இருக்கக்கூடும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தாலி



## செல்:ஃபி எடுத்தால் ரூ. 96,000 அபராதம்

செல்ஃபி எடுத்தால் இலங்கை மதிப்பில் 96,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படுமென இத்தாலி அரசு அறிவித்துள்ளது.

இத்தாலியின் முக்கிய சுற்றுலா தலங்களில் ஒன்றான போர்ட்டொஃபினோ என்கிற நகரத்திலேயே இச்சட்டம் அமலுக்கு வந்துள்ளது.

சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் ஒரே இடத்தில் அதிக நேரம் கூடுவதால் தேவையற்ற போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும், இதைக் கருத்தில் கொண்டே இப்புதிய தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்நகரத்தின் மேயர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதனை மீறி யாரேனும் செல்ஃபி எடுத்தால், 275 யூரோக்கள், அதாவது இலங்கை மதிப்பில் 96,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் சமயத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த விதியானது, வரும் ஒக்டோபர் மாதம் வரை அமலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த நகரில் மாலை 6 மணிக்கு மேல் செல்ஃபி எடுத்துகொள்ள எவ்வித தடையும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மெக்சிகோ

## மெக்சிகோவில் அதிசயம்

உலகின் இரண்டாவது மிக ஆழமான கடல் பள்ளம் மெக்சிகோ அருகே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மெக்சிகோவில் யுகேதான் தீபகற்பத்தில் உள்ள செத்துமல் வளைகுடாவில் காணப்படும் இந்த இராட்சத பள்ளமானது 900 அடி ஆழமுள்ளது எனவும் ஒன்றரை இலட்சம் சதுரடி பரப்பளவு கொண்டது எனவும் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

மேலும், இப்பள்ளத்தில் உள்ள தாவரங்கள் மற்றும் அவற்றின் இலைகள் காலப்போக்கில் அழுகி உருவாகும் பேக்டீரியாக்களால் இது அடர் நீல நிறத்தில்



காட்சியளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் இந்த இராட்சத பள்ளங்களில் ஒக்சிஜனின் அளவு மிகக் குறைவாகவே காணப்படுவதாகவும் சுற்றுலா பயணிகள் வழிதவறி நீந்திச்சென்றால் அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

இதைவிட பெரிய இராட்சத பள்ளம் ஒன்று இதற்கு முன்னர் தென் சீன கடல் பகுதியில் கண்டறியப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## பாடசாலையில் நக்கும் போட்டி

### கொந்தளிக்கும் பெற்றோர்

பாடசாலை யொன்றில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இடையே இடம்பெற்ற நக்கும் போட்டியானது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் வோஷிங்டன் மாகாணத்தில் உள்ள பாடசாலையொன்றிலேயே இவ் விநோதப் போட்டி நடைபெற்றுள்ளது.

மாணவர்களும் அவர்களுடைய ஆசிரியர்களும் கண்ணாடி திரையின் எதிரெதிர் பக்கங்களின் நின்று கொண்டு ஒருவரை ஒருவர் நாவால் நக்குவது தான் இப் போட்டியாகும்.

கடந்த 31ஆம் திகதி இடம்பெற்ற இப் போட்டியினை நியூயோர்க் போஸ்ட் செய்தி நிறுவனம் வீடியோவாக வெளியிட்டுள்ளது.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# ஜிரோனாவிடம் தோற்ற நடப்புச் சம்பியன்கள்



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகாத் தொடரில், ஜிரோனாவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியில் 2-4 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்றிட் தோற்றது.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 76 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பார்சிலோனா காணப்படுகிறது. 65 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் றியல் மட்றிட்டும், 60 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லெட்டிகோ மட்றிட்டும், 55 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் றியல் சொஸைடட்டும் காணப்படுகின்றன. இதில், றியல் மட்றிட்டும், றியல் சொஸைடட்டும் ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளன.



இன்று ஆரம்பிக்கிறது ஒ.நா.ச.போ தொடர்:

## பாகிஸ்தானை வீழ்த்துமா நியூசிலாந்து?

பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது, ராவல்பின்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

கேன் வில்லியம்ஸன், கிளென் பிலிப்ஸ், டெவோன் கொன்வே, மிற்செல் சான்ட்னெர் ஆகியோர் இல்லாத நிலையில், பதிலணித்தலைவர் டொம் லேதம், டரைல் மிற்செல், மற் ஹென்றி ஆகியோரின் பங்களிப்பு முக்கியமானதாகக் காணப்படுவதுடன், இருபதுக்கு - 20 தொடரில் பிரகாசித்த மார்க் சப்மன், றஷின் றவீந்திராவின் பங்களிப்பும் நியூசிலாந்துக்கு பலமானதாகக் காணப்படும்.

பாகிஸ்தானைப் பொறுத்த வரையில் அணித்தலைவர் பாபர் அஸாம், பக்கர் ஸமன் ஆகியோரின் பங்களிப்புகளே முக்கியமானதாகக் காணப்படுவதோடு, ஷகீன் ஷா அஃப்ரிடி, ஹறிஸ் றாப், நசீம் ஷாவின் பந்துவீச்சு விக்கெட்டுகளைக் கைப்பற்றக்கூடிய வகையில் காணப்படுகிறது.



ஐ.பி.எல்:

## மும்பை இந்தியன்ஸை வீழ்த்திய குஜராத் டைட்டான்ஸ்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக் தொடரில், அஹமதாபாத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான குஜராத் டைட்டான்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மும்பை

குஜராத்: 207/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷுப்மன் கில் 56 (34), டேவிட் மில்லர் 46 (22), அபினவ் மனோஹர் 42 (21), ராகுல் டெவாட்டியா ஆ.இ 20 (05) ஓட்டங்கள். பந்துவீச்சு: பியூஷ் சாவ்லா 2/34 [4], அர்ஜுன் டெண்டுல்கர் 1/9 [2], ஜேஸன் பெஹ்ரென்டோர்ஃப் 1/37 [4])

மும்பை: 152/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: நெஹால் வதேரா 40 (21), கமரொன் கிறீன் 33 (26), சூரியகுமார் யாதவ் 23 (12), பியூஷ் சாவ்லா 18 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: நூர் அஹ்மட் 3/37 [4], மோஹித் ஷர்மா 2/38 [4], ரஷீட் கான் 2/27 [4], ஹர்டிக் பாண்டியா 1/10 [2], மொஹமட் ஷமி 0/18 [4])

போட்டியின் நாயகன்: அபினவ் மனோஹர்

இந்நிலையில், ஜெய்ப்பூரில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸை ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர்கொள்கிறது.

> **ஜெய்ப்பூரில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸை ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர்கொள்கிறது**



# கால்பந்தாட்ட போட்டியில் அபராதே கழகம் வெற்றி





■ *நவி*

நோன்பு பெருநாளை சிறப்பிக்கும் வகையில், கண்டி, கெலிஓயா கல்கமுவ மத்திய கல்லூரி மைதானத்தில் கால்பந்தாட்ட போட்டி செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்றது. இதில் 14 கழகங்கள் பங்குபற்றி விளையாடின.

அபராதே மற்றும் எஸ்டன் வில்லா ஆகிய கழகங்கள் இறுதிச்சுற்று போட்டியில் விளையாடின. அபராதே கழகம் முதலாம் இடத்தையும் எஸ்டன் வில்லா கழகம் இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டன.

வெற்றி பெற்ற அணியினருக்கு கேடயம் வழங்கப்பட்டு பதக்கங்களும் அணிவிக்கப்பட்டன. சிறந்த வீரரான இல்லாம்க்கும், சிறந்த கோல்ட் காப்பாளரான அல்த்தாப்க்கும் பதக்கம் அணிவிக்கப்பட்டது.

கண்டியைச் சேர்ந்த தனியார் நிறுவனம் முகாமையாளர் முஜிபுர் ரஹுமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இந்தப் பரிசில்களை வழங்கி வைத்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 27 ஏப்ரல் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது